# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.35 (L.W.59)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr. Mahadevan | Caste | : - |
| Father's Name | : P.Kandasamy | Calling | :Professor of Plastic Sargery |
| Village | : Kilpauk | Religion | : Hindu |
| Taluk | : Chennai | Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.02.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 03.30 P.M.**

நான் தற்போது சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக சென்னை இராஜிவ் காந்தி அரசு மருத்துவனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 25.06.2015 ல் காலை 08.00 மணி முதல் 26.06.2015 அன்று காலை 08.00 மணி வரை நான் பணியில் இருந்தபோது அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்டடிருந்த ஷமீல்பாஷா வயது 26 என்ற ஆண் நபருக்கு வலது கையில் செயலிழந்த காயத்திற்கு சிகிச்சை அளிக்க அழைக்கபட்டேன். அவரை 26.06.2015 அன்று காலை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார்.

அவரின் வலது தோள்பட்டை மூட்டு முழுங்கை முட்டு, முழங்கை மற்றும் மணிக்கட்டிற்கு இடையேயான ரேடியோ அல்டாய்டு ஜாயின்ட் ஆகிய 3 மூட்டுகளிலும் அவர் தானாக அசைக்க முடியாத நிலையில் இருந்தார். வலது மணிக்கட்டு மற்றும் கை விரல்களில் அசைக்கும் திறன் குறைவாக இருந்தது.

வலப்பக்க மேற்கை மற்றும் முழுங்கையில் வெளிப்புறத்தில் தொடு உணர்ச்சி குறைவாக காணப்பட்டது. அவருக்கு கழுத்திலிருந்து கைகளுக்கு செல்லும் நரம்புகள் பாதிக்கப்படடிருக்கலாம் என முடிவு செய்து எம்ஆர்ஐ ஸ்கேன் பரிந்துரைக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்டவை ஷமீல்பாஷா என்பவரின் case sheet ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுத அதை நான் சரிபார்த்து கையொப்பம் செய்தேன். அந்த case sheet அ.த.சா.ஆ.55. அது ஒரு தாள் அடங்கிய இரண்டு பக்கங்களாகும். அது அசல் ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அது குறித்து வழக்கின் இறுதியில் வாதுரைக்கலாம். இவ்வழக்கு தொடர்பாக சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நோயாளியை நான் பார்க்கும்போது அவரின் முந்தைய மருத்துவ குறிப்புகளை பார்த்துவிட்டு பின்புதான் சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். நோயாளியின் காயங்கள் குறித்து அவரை முன்பு பரிசோதித்த மருத்துவர்களின் குறிப்புகளை என்னுடைய குறிப்பில் குறித்துள்ளேனா என்றால் இல்லை.

நோயாளியை இதற்கு முன்பு பதிசோதித்த மருத்துவர் கழுத்திலிருந்து கைக்கு வரும் நரம்பு பாதிகக்ப்பட்டிருக்கலாம் என்று அவர் எழுதியதை என்னுடைய மருத்துவ குறிப்பில் எழுதியுள்ளேனா என்றால் இல்லை. நோயாளியின் முந்தைய வேலூர் அரசு மருத்துவனை case sheet எங்கள் மருத்துவமனைக்கு வந்ததா என்றாலும் அதை நான் பார்த்தேனா என்றாலும் அதை பற்றி எனக்கு நினைவில்லை.

பொதுவாக ஒரு மருத்துவமனையிலிருந்து நோயாளியை மற்றொரு மருத்துவனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பும்போது அவரின் அனைத்து case sheet யும் அனுப்புவார்கள் என்றால் Discharge Summary–ஐ அனுப்புவார்கள். அவ்வாறான Discharge Summary ஐ பார்த்தேனா என்று நினைவில்லை. நான் கையொப்பம் செய்த இடத்தில் என்னுடை பெயரை பெரிய எழுத்துக்களில் எழுதி தேதி மற்றம் நேரம் குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.55 ல் அவ்வாறான கையொப்பம் மற்றும் தேதி நேரம் உள்ளதா என்றால் இல்லை. சுருக்கொப்பம் இட்டுள்ளேன். அந்த ஆவணத்தில் நான் நோயாளியை பார்த்த நேரத்ததை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.55 ல் கையொப்பம் போட போதிய இடம் இருக்கும்போதும் நான் ஓரத்தில் எதை வேண்டுமானாலும் நிரப்பிக்கொள்ளும் வகையில் சுருக்கொப்பம் இட்டுள்ளேன் என்றால் எழுதி முடிந்தவுடன் அதற்கு கீழே சுருக்கொப்பம் இட்டுள்ளேன். போதுமான இடம் ஆவணத்தின் கீழ் பகுதியில் இருக்கிறது.

அ.த.சா.ஆ.55 ல் வலது பக்க கடைசி ஓரத்தில் நான் சுருக்கொப்பம் போட்டுள்ளதையும் மேலே உள்ள இடங்கியல் வழக்கிற்கு தேவையானதை எழுதிக்கொள்ள இடம் உள்ளது என்றால் சரியல்ல. இடது பக்கத்தில் இடம் உள்ளது. போலீசார் விசாரணையில் எத்தனை மணிக்கு நான் நோயாளியை பார்த்தேன் என்று சொல்லவில்லை என்றும் அ.த.சா.ஆ.55 லும் நோயாளியை பார்த்த நேரத்தை குறிக்பிடவில்லை என்றாலும் அதனால் நான் நோயாளியை பார்கக்காமல் அ.த.சா.ஆ.55 ல் எழுதி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.55 ஒளி நகல் ஆவணம் என்றால் சரிதான். அதன் அசல் ஆவணங்களை பார்த்தால்தான் அதில் உள்ள சரியான கருத்துக்கள் தெரியும் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.55 Manipulate செய்யப்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணியல் நோயாளிக்கு நான் அளித்த சிகிச்சையின் அசல் ஆவணங்களை வைத்துதான் வாக்குமூலம் அளித்தேன் என்றாலும் அதை அவர்கள் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.55 ல் என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுதியதால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

Patient name is Shameed Basha. நான் நோயாளியை கடைசி முறை பார்க்கும்வரை MRI Brachial Plexus எடுக்கவில்லை என்றால் சரிதான். வேலூர் மருத்துவனியல் எடுக்கப்பட்ட MRI ஐ நான் பார்க்கவில்லை. Right Brachial Plexus Injury இருக்கலாம் என்று நான் மருத்துவ குறிப்பில் குறித்துள்ளேன்.

MRI ஸ்கேன் பார்க்காமலே Brachial Plexus Injury எடுத்ததாக நான் போட்டுள்ளேன் என்றும் அதில் suspect என்று குறித்துள்ளேன் என்றால் சரியல்ல. அது Clinical Diagnosis ஆகும். அதை உறிதிப்படுத்தவதற்கு எம்ஆர்ஜ ஸ்கேன் எடுக்க பரிந்துரைத்தேன். நான் போலீசார் விசாரணையில் சொல்லாத பலவற்றை போலீசார் சொல்லி கொடுத்ததை நீதிமன்றதில் பொய் சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நோயாளி 201–வது வார்டில் இருந்தார். ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் நான் இருக்கும்போது நான் பரிசோதனை செய்கின்ற நோயாளியின் குறிப்புகளை நான் தனியாக case sheet பராமரிப்பேன் என்றால் அதை அவசர பதிவேட்டில் பதிவிப்போம். case sheet என்பது நோயாளியின் குறிப்புகளை பராமரிப்பதாகும். நான் நோயாளியை பார்க்க அழைக்கப்பட்டேன். நான் சென்று பார்த்தேன். நோயாளியை என்னிடம் பரிந்துரைக்கவில்லை.

நோயாளியின் முந்தைய குறிப்புகளை பார்த்துதான் நோயாளிக்கு ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை வேண்டுமா என்று நான் முடிவு

செய்வேன் என்றால் சரிதான். நோயாளிக்கு ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை செய்வில்லை. Clinical Diagnosis மட்டுமே செய்தேன். எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்க பரிந்துரைத்தேன். அதற்கு பிறகு நான் நோயாளியை பார்க்கவில்லை.

எம்ஆர்ஐ ஸ்கேன் பார்க்காமல் நான் Clinical Diagnosis கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. I have given only Clinical Diagnosis. அதன் பின்னர் நோயளியின் உடல் நிலை குறித்து எக்ஸ்ரே, சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ ஸ்கேன், blood test, urine test ஆகியவை எடுப்பது investigation ஆகும்.

அதையெல்லாம் எடுத்த பின்னர் அந்த அறிக்கையின் அடிப்படையில் நோயாளிக்கு சர்ஜிக்கலாக அறுவை சிகிச்சை செய்து சரிபடுத்த வேண்டுமா என்று நாங்கள் முடிவு செய்வோம். இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி வழக்கில் கண்ட நோயாளிக்கு என்ன செய்தோம் என்றால் எம்ஆர்ஐ ஸ்கேன் வராததால் நான் மேற்கொண்டு எதையும் செய்யவில்லை.

சிபிசிஐடி போலீசார் என்று விசாரித்தார்கள் என்று நினைவில்லை. என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்த நாளில் மற்ற யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நோயாளியை எந்த மருத்துவமனையில் இருந்து refer செய்யப்பட்டார் என்று அ.த.சா.ஆ.55 ல் நான் குறிப்பிடவில்லை. விபத்து பதிவேட்டை casualty medical officer பதிவார்.

மருத்தவ ஆவணங்களின்படி நோயாளி வேலூர் அரசுமருத்துவமனையில் 22.06.2015 அன்று சேர்த்து 25.06.2015 அன்று நோயாளியை மேல் சிகிச்சைக்காக விடுவித்ததாக குறிப்பிடப்பட்டுளளது என்றால் சரிதான். அவரை விடுவித்து மேல் சிகிச்சைக்காக refer செய்யப்பட்டுள்ளார்.

உள்நோயாளியாக சேர்க்கும்போது அவருக்கு IP எண் கொடுப்பார்களா என்றால் சரிதான். குற்ற வாக்குகளில் சிகிச்சை அளித்த அசல் ஆவணங்களை குறிப்பிடவேண்டும் என்றும் ஒளிநகல் ஆவணங்களை குறிப்பிடக்கூடாது என்றால் அந்த மருத்துவனியல் கேட்டேன் அவர்கள் 6 ஆண்டுகளுக்கு மேல் உள்ள ஆவணங்களை வைத்துக்கொள்ள வேண்டாம் என்று அதனை கழித்துள்ளார்கள்.

அசல் ஆவணங்களை குற்ற வழக்கு முடியும் வரை பாதுகாக்க வேண்டும் என்றும் அசல் ஆவணங்கள் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்தான் மருத்துவர் மகாதேவன் என்பதற்கான சம்பந்தப்பட்ட அடையாள அட்டையை கொண்டுவந்துள்ளேன். அதை கற்றிறிந்து 6 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தரப்பில் வழக்கறிஞர் பாலுவிடம் காட்டப்பட்டது. அ.த.சா.ஆ.55 ல் தேதி, நேரம், கையொப்பம் போடாமல் சுருக்கொப்பம் மட்டுமே போட்டுள்ளதால் நான் சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**
**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.50 மணி**